(உ) பேரவைத் தலைவர் மாடத்திலிருந்து கோஷமிட்டுக் கொண்டு துண்டுப் பிரசுரங்களை அவைக்குள் வீசியெறிந்த உதயராணி, வள்ளிராணி, பரணி இட்லர், முராஜ் முசோலினி ஆகியோரை எச்சரித்து விடுவது குறித்து

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN: Sir, I move—This House resolves that the persons calling themselves Udaya Rani, Valli Rani, Barani Hitler and Muraj Mussolini who shouted slogans and threw some pamphlets from Speaker's Gallery on the floor of the House at 12-15 p.m. today, 19-4-1975 and who are taken into custody immediately thereafter, have committed a grave offence and are guilty of gross contempt of this House.

This House further resolves that these four persons aged 18, 17, 14, and 12 may be left with admonition.'

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவர்களை எச்சரித்து, மன்னித்து விடுதலை செய்யப்படுகிறார்கள்.

(பிற்பகல் 1-00.)

8. அரசினர் சட்ட முன்வடிவு—தொடர்ச்சி.

(இ) 1975ஆம் ஆண்டு, சென்னை மாநகரக் காவல் துறை (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/75)

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, '' 1975-ம் ஆண்டு, சென்னை மாநகரக் காவல் துறை (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/75) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் '' என நான் முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1930 ஆம் ஆண்டு சூதாட்டச் சட்டத்தின் விதித்துறைகள் செயல்படுவதில் குறிப்பாக, பருத்தி விலைகள் மீதான சூதாட்டம் இதைப் போன்ற ஏனைய சூதாட்டங்களையொட்டி அச்சட்டத்தில் காணப்படும் குறைபாட்டை நீக்கும் நோக்கத்துடனும், மேற்படி சட்டத்தின் விதித்துறைகளை கண்டிப்பாகச் செயல்படுத்துவதற்காக அவற்றில் தகுந்த திருத்தங்களைக் கூறும் நோக்கத்துடனும், தமிழ்நாடு 1930-ம் ஆண்டு சூதாட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் III of 1930) தற்போதைய விதித்துறைகளை ஆய்வு செய்ய அரசு 1960-ல் குழு ஒன்றை அமைத்தது. பருத்தி விலைகள் முதலியவை மீதான சூதாட்டங்களில் உள்ள தீமைகளை ஒடுக்க, 1888-ம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் துறைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் III of 1888) விதித்துறைகளும், தமிழ்நாடு 1930-ம் ஆண்டு சூதாட்டங்கள் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம்

* 16-4-1975-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.